சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - 2021-2022-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு.சங்கரவள்ளி நாயகம், மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து பரிவுத் தொகை வழங்க ரூ.80,00,000/-மும் வாகனச் செலவு மற்றும் இதர சில்லரைச் செலவினம் ரூ.60,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் 29.11.2021
பிலவ, கார்த்திகை-13
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.7283/தமிழ்4/2021, நாள் 14.09.2021 மற்றும் 02.11.2021.

******

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-இன் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

"தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ.இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகை வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2) தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் தமிழறிஞர்களின் கருத்துக் கருவூலங்கள் பொதுமக்கள் அனைவரையும் எளிய முறையில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன என்றும்,

தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ. இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து அவர்களது நூல்களுக்கு பரிவுத் தொகை (நூலுரிமைத் தொகை) நிருணயம் செய்ய தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் 5 நபர்கள் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப் பெற்று இவ்வல்லுநர் குழுவின் மூலம் மேற்படி 6 தமிழறிஞர்களின் நூல்கள் ஆய்வு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு பரிவுத் தொகை வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ.எண் | பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | சிலம்பொலி சு. செல்லப்பன் | ரூ.15.00 இலட்சம் |
| 2. | முனைவர் தொ. பரமசிவன் | ரூ.15.00 இலட்சம் |
| 3. | புலவர் இளங்குமரனார் | ரூ.15.00 இலட்சம் |
| 4. | திரு. முருகேச பாகவதர் | ரூ.10.00 இலட்சம் |
| 5. | திரு. சங்கரவள்ளி நாயகம் | ரூ.10.00 இலட்சம் |
| 6. | புலவர் செ. இராசு (புலவர் செ. இராசு மற்றும் எடப்பாடி அமுதன் ஆகிய இரு ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய கி.பி. 1800இல் கொங்கு நாடு என்ற நூலைத் தவிர) | ரூ.15.00 இலட்சம் |
| | மொத்தத் தொகை | ரூ.80.00 இலட்சம் |

3) மேலும், தமிழறிஞர்கள் 6 பேரின் குடும்ப மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குவதற்கு ஏதுவாக 2021 - 2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்க வகையில் தொடராச் செலவினமாக ரூபாய் 80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்புச் செய்யப் பெறலாம் என்றும், தமிழறிஞர் ஆறு பேரின் மரபுரிமையர்கள் / குடும்பத்தாருக்கு சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் ஒப்பாவணம், காசோலை உறை தயாரித்தல் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துவர வாகன வசதி உள்ளிட்ட பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ள ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வீதம் 6 பேருக்கு ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப் பெறலாம் என்றும், பரிவுத்தொகை மற்றும் சில்லரைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித்

தொகுப்பு தொகுதி - I, பிரிவுக்கூறு 99இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்படலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின் 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து பரிவுத்தொகை (நூலுரிமைத் தொகை) வழங்கலாம் என முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு.சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்கள் (புலவர் செ. இராசு மற்றும் எடப்பாடி அமுதன் ஆகிய இரு ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய கி.பி. 1800இல் கொங்கு நாடு என்ற நூலைத் தவிர) நாட்டுடைமையாக்கம் செய்யப்படுகிறது.

(ii) திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 4 தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத்தொகையாக தலா ரூ.15,00,000/- திரு.முருகேச பாகவதர் மற்றும் திரு. சங்கரவள்ளி நாயகம் ஆகிய 2 தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத்தொகையாக தலா ரூ.10,00,000/- ஆக மொத்தம் ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) மேற்படி ஆறு தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள்/ குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு, ஆறு பேரின் மரபுரிமையர்கள் / குடும்பத்தாருக்கு சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் ஒப்பாவணம், காசோலை உறை தயாரித்தல் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துவர வாகன வசதி உள்ளிட்ட பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ள ரூ. 10,000/- வீதம் 6 பேருக்கு ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iv) வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(v) ஒப்பளிப்பு செய்யப்படும் பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி - I, பிரிவுக்கூறு 99-இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞர்களின்

மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையை பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5) மேலே பத்தி 4(ii)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை - தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 309 உதவித் தொகை - 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித்தொகை"

IFHRMS (த.தொ.கு. 2202 05 800AK 30903)

6) மேலே பத்தி 4(iii)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுகல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை - தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 305 அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(த.தொ.கு. 2202 05 800AK 30502)

7) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.80,60,000/-ம் 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீட்டு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்க செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர் தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகளில், திருத்த / மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ / வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.53182/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 29.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.989 (தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை- 8.

அனைத்து மாவட்ட தமிழ் வளர்ச்சி இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர்கள்.

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை- 8 / மதுரை.

மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை - 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்

முதன்மை தனிச்செயலர், சென்னை- 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ.I/வ.வI)த் துறை, சென்னை- 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

29/11/21

அரசு சார்புச் செயலாளர்

29.11.2021

1/3

## சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

### தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.180

நாள் 16.12.2021

பிலவ, மார்கழி -1

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. திரு. அ.அன்புச்செல்வன் அவர்களின் கடிதம், நாள் 07.12.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்11269/தமிழ் 4/ 2021, நாள் 09.12.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் திரு. அ.அன்புச்செல்வன் என்பவர் தமிழ்நாடு அரசின் மேனாள் நிதித்துறை அமைச்சரும் தனது தந்தையுமான பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் எழுதிய 41 நூல்களை நாட்டுடைமையாக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறதென்றும், அவ்வகையில் இதுவரை 162 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 12.32 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதென்றும், அவ்வகையில் மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்யக்கோரி அவரின் மகன் திரு. அ.அன்புச்செல்வன் அவர்கள் கடிதம் அளித்துள்ளதாகவும், அவ்வகையில் தமிழறிஞர், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 41க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளதாகவும்,

இவரது கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பெறலாம் என்றும், பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப் பெறுவதற்கு அரசால் வழங்கப்பெறும் நூலுரிமைத் தொகையை அரசு நிலையில் கருதிப்பார்த்து முடிவுசெய்யப் பெறலாமெனவும், இதற்கென 2021-2022 வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்பெறவில்லை என்பதால், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசால் வழங்கக் கருதும் தொகையினை 2021-2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்கவகையில் ஒப்பளிப்புச் செய்யுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், தமிழறிஞர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் அனைத்து நூல்களையும் நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/-(ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக் கல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை - தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 309 உதவித் தொகை - 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
IFHRMS(த.தொ.கு. 2202 05 800AK 30903)

5) மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தொகையினை தமிழ்நாடு நிதிவிதித்தொகுப்பு-I பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6) மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர் தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய

கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ (ம) வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.57802/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 16.12.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1196 (ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை - 8.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 8.

மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9..

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச்செயலர், சென்னை - 9.

இயக்குநர் / துணைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
செய்தி மக்கள் தொடர்பு, சென்னை - 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ 1/வ.வI/II)த் துறை, சென்னை - 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

16/12/21

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.186

நாள் 24.12.2021

பிலவ, மார்கழி - 9

திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு.வி.ஆர்.நெடுஞ்செழியன் மதிவாணன் அவர்களின் கடிதம், நாள் 11.12.2021 மற்றும் 16.12.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.11714/தமிழ் 4/2021, நாள் 20.12.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் தலைவரும் முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களது மகனுமான திரு. வி.ஆர்.நெடுஞ்செழியன் மதிவாணன் அவர்கள் முனைவர் நாவலர் நெடுஞ்செழியன் நினைவாக இவரது குடும்பத்தினரால் 2017 முதல் கல்வி அறக்கட்டளை துவங்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதாகவும், அவர் எழுதிய நற்றிணைக் காட்சிகள், சிந்தனை மலர்கள், பண்பாடு போற்றுவோம், திருக்குறள் தெளிவுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு, திராவிட இயக்க வரலாறு, திருக்குறள் நாவலர் உரை, வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும் மற்றும் திருக்குறளில் உவமை நயம் ஆகிய நூல்களை நாட்டுடைமையாக்கி முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் புகழினை கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பரப்புரை செய்வதற்கு மேற்படி அறக்கட்டளைக்கு உதவித்தொகை வழங்குவதை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு அரசும் உத்தேசித்தவாறு வழங்கும்படி கோரியுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள்

எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறதென்றும், அவ்வகையில் இதுவரை 164 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 12.62 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதுதென்றும், அவ்வகையில் மறைந்த தமிழறிஞர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்யக்கோரி அவரின் மகன் திரு. நெ.மதிவாணன் அவர்கள் கடிதம் அளித்துள்ளதாகவும், எனவே, தமிழறிஞர், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 31 க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர், சிறப்புவாய்ந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அவரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கம் செய்யலாமெனவும், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்பெறுவதற்கு அரசால் வழங்கப்பெறும் நூலுரிமைத் தொகையை அரசு நிலையில் கருதிப்பார்த்து முடிவுசெய்யப் பெறலாமெனவும், இதற்கென 2021-2022 வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்பெறவில்லையெனவும், நாட்டுடைமையாக்கப்பட்டமைக்குரிய நூலுரிமைத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் பெறவரும் தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு சிறப்பு செய்யும் பொருட்டும், காசோலை உறை, சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ளவும் ரூ 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) 2021-2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்க வகையில் ஒப்பளிப்பு செய்யப்படும் நூலுரிமைத் தொகை மற்றும் சில்லரைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி – 1, பிரிவுக்கூறு 99 இன் கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தனது எழுத்துகளின் வாயிலாக தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகளுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில், முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் புகழினை கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பரப்புரை செய்வதற்கு ஏதுவாக, இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி - 05 மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"

IFHRMS (த.தொ.கு. 2202 05 800AK 30903)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தொகையினை தமிழ்நாடு நிதிவிதித்தொகுப்பு-I பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ / (வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.59766/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 24.12.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1261 (ஆயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை- 8.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை- 8.

மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்

முதன்மை தனிச்செயலர், சென்னை- 9.

இயக்குநர் / துணைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,

செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை – 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ I/II/வ.வI)த் துறை, சென்னை- 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்

24/12/21

**மே.கு.எண்.தமிழ்4/11714/2021, நாள்:24.12.2021**

//அரசாணை வழங்கப்பெறுகிறது//

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்:

திரு. நெ. மதிவாணன்

த/பெ. திரு. இரா. நெடுஞ்செழியன் (மறைவு),

எண்.1, டாக்டர் எம்.டி.கே. குத்தாலிங்கம் சாலை,

கூனிமேடு அஞ்சல், இரங்கநாதபுரம்,

கிழக்கு கடற்கரைச் சாலை,

மரக்காணம் – 604 303

விழுப்புரம் மாவட்டம்.